1994 ஏப்ரல் 18]

எங்கள் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள 12 தொகுதிகளில், திருப்பத்தூர் தொகுதி எந்தத் தொழிற்சாலையும் இல்லாத தொகுதி. தொழிற் புரட்சி செய்துவரும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருப்பத்தூர் தொகுதியிலே தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைத்துக் கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்குத் தாமாகவே முன்வருவார்களேயானால், கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு தொழில் வணிக இயக்குநரகம் பரிசீலனை செய்து, நல்ல முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தீப்பெட்டிக்குத் தேவையான மூலப் பொருள்கள் திருப்பத்தூர் தொகுதியிலே நிறைய கிடைக்கின்றன. அதனால் தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைச்சரவர்கள் அமைத்துக் கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைப்பதற்கு முன்வருவார்களேயானால் அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 290, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

290–

தொகுப்பு வீடுகளுக்குப் பப்பாளி, முருங்கை மற்றும் தென்னங்கன்று வழங்குதல்.

22537–டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ள காலனிகளில், ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பப்பாளி மரம், ஒரு முருங்கை மரம் வழங்கவும், ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் ஒரு தென்னங்கன்றை துறையே நடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பரிசீலிக்கப்படுகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எண்ணெய் வித்து உற்பத்திக்கு ஒரு தன்னிறைவைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 6-ஆம் வகுப்பு படித்த ஒவ்வொரு மாணவ, மாணவிக்கும் தென்னங்கன்று ஒன்றைக் கொடுத்து உன்னதத் திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கிறார்கள். அதே திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தும் வண்ணமும், நீர் வரத்தைப் பாதுகாக்கும் வண்ணமும், மேலே குறிப்பிட்ட என்னுடைய திட்டத்தைச் செயல்படுத்த இந்த ஆண்டிலேயே முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 6-வது வகுப்பு படிக்கக்கூடிய மாணவர்களுக்குத்தான் புரட்சித் தலைவியினுடைய மாணவர் தென்னை வளர்ப்பு திட்டத்தின்கீழ் இலவசத் தென்னங்கன்று வழங்கப்படுகிறது. தொகுப்பு வீடுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், மானிய விலையிலே தரக்கூடிய தென்னங்கன்றுகளைப் பெற்று அவர்கள் வளர்த்து வரலாம்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர் வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை கொடுத்து, 1994-95 ஆம் ஆண்டில் சுமார் 2,16,250 ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர உன்னதத் திட்டத்தை வகுத்துள்ள நமது அரசு, சத்துணவுக் கூடம் மற்றும் தொகுப்பு வீடுகளில் வீணாகும் கழிவுநீரைக் கூடப் பயன்படுத்த வேண்டுமென்ற இலட்சியத்தைச் செயல்படுத்தும் வண்ணம் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து தமிழகம் முழுவதும் இதைச் செயல்படுத்த வேண்டுமென்று கோரி, அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பழங்கள், காய்கறிகள் என்று வசதிபடைத்தவர்கள் மட்டுமே வாங்கி உண்ணக்கூடிய அளவிற்கு நிலை இருக்கிறது. ஏழை எளியவர்கள் பழங்களைச் சாப்பிடுவதற்கும், காய்கறிகள் மற்றும் கீரைகளைப் பெறுவதற்கும் தொலைநோக்குப் பார்வையோடு புதிய சிந்தனைகளின் புறப்பாடாய் விளங்கும் புரட்சித் தலைவியினுடைய அரசு இதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.